RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# நடராஜன் நடனம் காட்டும் தத்துவம்

**நா. முருகேஸ்வரி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சரஸ்வதி நாராயணன் கல்லூரி மதுரை -22, தமிழ்நாடு, இந்தியா

# Nataraja's Dance: A Philosophical Perspective

**N. Murugeswari** [a, *]

[a] Department Tamil, Saraswathi Narayanan College, Madurai – 22, Tamil Nadu, India

* Corresponding Author: murugeswariharsha@gmail.com

**ABSTRACT**

In the Indian philosophical tradition, Nataraja, the dancing form of Lord Shiva, is not merely a religious symbol but also represents a profound philosophical conception of the dynamic functioning of the universe. Nataraja's dance extends beyond the realm of devotional symbolism and is closely associated with metaphysics, philosophy, Saivism, and Saiva Siddhanta. The cosmic dance of Nataraja symbolizes the continuous movement and transformation of the universe. Every element of existence is understood as participating in this dynamic cosmic process. His dance therefore serves as a philosophical representation of creation, preservation, transformation, concealment, and grace within the Saivite worldview. The Nataraja philosophy occupies a significant position within Saiva thought, representing the dynamic relationship between the Supreme Being, the universe, and living beings. The image of Nataraja provides a symbolic framework through which profound philosophical concepts concerning existence, consciousness, cosmic activity, and liberation can be understood. The objective of this study is to examine the Nataraja philosophy and the philosophical significance of Shiva's cosmic dance, with particular emphasis on its relationship to Saivism and Saiva Siddhanta. The study seeks to demonstrate that Nataraja's dance is not merely an artistic or devotional representation but a profound philosophical symbol expressing the dynamic nature of cosmic existence.

**Keywords:** Lord Shiva, Saivism, cosmic existence, Saiva Siddhanta

## முன்னுரை

இந்திய தத்துவ மரபில் நடராஜர், பரம்பொருளின் இயக்க வடிவமாக் கருதப்படுகிறது.ஆனந்த தாண்டவம் சிருஷ்டி, ஸ்திதி,சம்ஹாம், திரோபாவம், அனுக்கரகம் எனும் நோக்கங்களை உணர்த்துகிறது. நடராஜன் நடன தத்துவத்தின் தத்துவார்த்தம் சின்னவியல், அழகியல், அறிவியல் ஆகியன விளக்குகின்றது. தமிழில் உள்ள கலைகள் அறுபத்து நான்கு கலைகளை, 'எண்ணன் கலையும்' என்கிறது சிலம்பு. அவற்றுள் ஒன்று ஆடற்கலை. அவ்வாடல் கூத்து, தாண்டவம், நடனம் போன்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது. இவ்வாய்வு நடராஜனின் ஆனந்த தாண்டவத்தின் நடனம் காட்டும் தத்துவங்களை எடுத்தியம்புகின்றது.

## தாண்டவங்களின் வகைகள்

சிவன் ஆடிய தாண்டவங்கள் எழு வகையாக குறிப்பர். சந்தியா தாண்டவம், உமா தாண்டவம் கௌரி தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், கஜ சம்ஹார தாண்டவம், காளிகா தாண்டவம், ஆனந்த தாண்டவம். மேலும் பல வகையான தாண்டவங்கள் உள்ளன

## நடராஜன் ஆடல்

சிவனை முழுமுதற் கடவுளாக கருதி வழிபட்டு வந்த தமிழர்கள்,இறைவனைச் சிவலிங்கமாகவும்,ஆடல் வல்லவனாகவும் போற்றி வந்தனர். பின்னர் இவ்வாடல் வடிவங்களை வடமொழிப் பெயர்களாகவும் சுட்டினர். நடராஜர் என்பதற்கு நடனம் ஆடுவதில் அரசன் என்று பொருள் கொள்கின்றனர்`திரிகூட நடராசருடனாத வடிவய் 'என்றும் `நடராஜர் தம் நடனம் நன்னமே' என்றும், குறிப்பிடுகின்றனர்.

## ஆனந்த தாண்டவம்

ஆனந்த தாண்டவம் பெருமானுடைய திருவுருவம் பல்வேறு நூல்களில் சொல்லோவியமாக் கூறியருப்பதை, சிற்ப உருவமாகச் செய்து கொடுத்திருக்கின்றார்கள். ஏனைய தாண்டவ உருவங்களைப் போலவே இந்த ஆனந்த தாண்டவ உருவமும் அழகும் கருத்துக்கு இன்பத்தையும் தருவதாக அமைந்துள்ளன, மயிலை சீனி வெங்கடசாமி அவர்கள் எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோளில், "சடைமுடியில் கங்கை, நிலா, பிறை, கொக்கிறகு, தலையோடு பாம்பு இவைகளை அணிந்திருக்கின்றார். தாண்டவம் செய்யும் வேகத்தினாலே சடைமுடி அவிழ்ந்து புரிசடைகள் இருபுறமும் அலைகின்றன" என்கிறார்.மேலும் நான்கு கைகள் உள்ளன. வலது கையில் துடியும் அபய முத்திரையும் உள்ளன. அபய கரத்தின் முன் கையில் பாம்பு ஒன்று சுற்றிக்கொண்டு பட மெடுத்துதாடுகின்றனது. இடது கையில் ஒன்றில் தீச்சுடர் இருக்கிறது. வலது கை நீட்டித் தூக்கிய நிலையில் காணப்படுகிறது .இந்த தோற்றத்தை திருநாவுக்கரசர் 'தருகழிய முயலகன் மேல் தாள் வைத்தானை' என்றும், 'அடங்காத முயலகனை அடிக்கீழ்க் கொண்டார்,'என்றும் கூறுகிறார்.

இறைவன் முதன் முதலில் தில்லையில் ஆடிய நடனமாக் கருதப்படுகிறது ஆனந்த தாண்டவம்,இக்குறிப்புகள் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.பேரின்பம் என்ற பொருளே ஆனந்தம் என்ற சொல்லிற்குப் பொருத்தமாக உள்ளது. மகிழ்ச்சியான நிலையில் இறைவன் ஆடிய தாண்டவமே ஆனந்த தாண்டவம் ஆகும். ஆனந்த தாண்டவ கோலம் நடராசனின் உருவம் விஞ்ஞானம்,கலை ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் உண்மையாக திகழுகின்றது.ஆனந்த தாண்டவத் திருமேனிகள் சோழர் காலத்தில் தோற்றம் பெற்றவை என்பதும் ஆனந்த குமாரசாமியின் கருத்தாகும்.இருப்பினும் திருமூலர், திருநாவுக்கரசர் போன்றோர் ஆனந்த தாண்டவம் குறித்து தங்களின் பாடல்களில் பாடியுள்ளாகள்.

## தமிழ் இலக்கியங்களில் ஆனந்த தாண்டவம்

உலகத்தின் உயிர்கள் இன்பமடைய இறைவன் படைத்தல், காத்தல் போன்ற தொழில்கள் புரிகின்றான். அத்தொழில்கள் மூலம் அனைவரும் இன்பமடைகின்றனர்.இறைவனின் ஆடல் நிகழும் பொழுது அதற்கு பயன்படும் பொருள்கள் அனைத்தும் இன்பம் அடைகின்றன,என்ற உயரிய கருத்தை தனது பாடல்கள் மூலம் பதிவு செய்துள்ளார் திருமூலர். மேலும் அப்பர் "குனித்த புருவமும் குமிண் சிரிப்பும் இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும்" (நான்காம் திருமுறை-பதிகம்-81)@!என்று தாண்டவத்தின் சிறப்பை எடுத்துரைக்கின்றார். சிவனே மகிழ்ந்து ஆடியதாகவும் அம்மகிழ்வாள் மற்ற உயிர்களையும் குமிண் சிரிப்புடன் ஆடல் புரிகிறான். மேலும், 'எடுத்த பொற்பாதம்' என்பது ஆனந்த தாண்டவத்தில் காணப்படும் தூக்கிய இடது திருவடியைச் சுட்டுகிறது. இவ்வாறானச் சிறப்புகளை ஆனந்த தாண்டவம் பெற்றுள்ளது.

## மறைபொருள் தத்துவம்

தாண்டவச் சிற்ப உருவங்களிலே மறைபொருளின் பலவகையான கருத்துக்கள் மறைக்கப்பட்டுள்ளன. சிற்பங்களில் காணப்படும் அடையாளங்களின் உண்மைப்பொருளை அனைவரும் அறியா வண்ணம் உள்ளன.சிற்பங்களில் காணப்படும் தத்துவப் பொருளையும் அதன் உட்கருத்துக்களையும்,தத்துவத்தின் உண்மைப் பொருளையும் அனைவரும் அறிதல் வேண்டும்.

## ஐஞ்செயலும் ஆனந்த தாண்டவமும்

நடராஜனின் ஐஞ்செயலையும் ஒருங்கேக் காட்டுகிற தாண்டவம் தான் ஆனந்த தாண்டவம் என்பர்.இந்தத் தாண்டவம் தில்லைப் பொன்னம்பலத்திலே சிவபெருமான் காட்சியளிக்கின்றான். புராணங்களில் "பதஞ்சலி வியாக்கிர பாதர் என்னும் முனிவர்கள் காண்பதற்காக இந்தத் தாண்டவத்தை இறைவன் செய்தருளினார் என்று புராணம் கூறுகிறது".என்கிறார் மயிலை. சீனி. வேங்கடசாமி-(இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், ப:8)

ஆனந்த தாண்டவம் இறைவனின் படைத்தல், காத்தல் அளித்தல், மறைத்தல்,அருளல் என்னும் ஐஞ்செயல்களையும் இத்தாண்டவத்தில் ஒருங்கே நிகழ்கின்றன என்பதை திருமூலர்,

“அரன் துடித்தோற்றம் அமைப்பில் திதியாம்

அரன் அங்கிதன்னில் அறையில் சங்காரம்

அரனுற் றணைப்பில் அமரும் திரோதாயி

அரனடி என்றும் அனுக்கிரகம் என்னே ”(திருமூலர்-திருமந்திரம்-பா-87)

என்கிறார். மேலும் நடராஜர் திருவுருவத்தின் ஐஞ்செயல் தத்துவக் கருத்தை குமரகுருபரர்,

“பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்

நாமநீர் வரைப்பில் நானில வளாகமும்

ஏனைப் புவனமும் எண்ணீங் குயிரும்

தானே வகுத்ததுள் தருமக் கரமே

தனித்தனி வகுத்த சரா சரப்பகுதி

அனைத்தையுங் காப்பதுஉம் அமைத்த பொற்கரமே

அடுத்த இன்னுயிர்கட்கு அளவில் பேரின்பம்

கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே ”(குமரகுருபரர்-சிதம்பர மும்மும்மணிக்கோவை-பாடல்-55)

இப்பாடலில் சிவபெருமானின் துடி ஏந்திய கை ஆக்கல் செயலையும்,அபயக்கை காத்தல் செயலையும், தீச்சுடர் ஏந்திய கை அளித்தல் செயலையும்,ஊன்றிய திருவடி மறைத்தல் செயலையும்,தூக்கிய திருவடி அருளல் செயலையும் குறிப்பதாக அமைகின்றது.முயலகன் உருவம் ஆன்மாவைக் குறிக்கிறது.

## மறைமொழியும் - சிவனும்

சிவன் செய்யும் ஐந்தொழிலைக் குறிக்கின்ற மறைகள் ஐந்தாகும். இதனை பஞ்சாட்சரம் என்றும் கூறுவர்.

“நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த

மறைமொழி தானே மந்திரம் என்ப ”(தொல்-பொருள்-நூற்பா-480)

என்பது தொல்காப்பியர் விளக்கம். சைவ சமய சாஸ்திரத்தை நன்கு அறிந்த நிறைமொழி மாந்தர் பஞ்சாட்சரம் என்னும் மறைமொழி.அது நமசிவாய என்பது இந்த ஐந்து எழுத்தில் சிவனின் ஐந்து தொழிலைச் செய்கிற சிவபெருமானுக்கு நமச்சிவாயன் என்ற பெயர் வந்ததாகவும் கூறுவர்கள்.மாணிக்கவாசகர் சிவபுராணத் தொடக்கத்தில்,

“நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க” (சிவபுராணம்-அடி-1)

என்று தொடங்கியுள்ளார்.மேலும் திருநாவுக்கரசரும் “நமச்சிவாயா பதிகம்”பாடியுள்ளார் இப்பதிகத்தின் இறுதியில் நமச்சிவாய என்று முடியும் தன்மையை அறிய முடிகிறது.

“பண்ணிய உலகினிற் பயின்ற பாவத்தை

நண்ணி நின் றறுப்பது நமச்சிவாயவே”( திருநாவுக்கரசர்- நான்காம் திருமுறை-11வது பாடல்) என்கிறது.

மனவாசகங் கடந்தார்,

“சிவன் அருள் ஆவி திரோதம், மலம் ஐந்தும்

அவனெழுத்து அஞ்சின் அடைவாம்- இவனின்று

நம்முதலா ஓதில்அருள் நாடாது நாடும் அருள்

சிம்முதலா ஓதுநீ சென்று ”(மனவாசகங்கடந்தார்- உண்மை விளக்கம்- பாடல்-1)

என்கிறார். மேலும் அவர் சிவாயநம என்னும் மந்திரத்தை நடராச மூர்த்தத்தில் அமைத்துக்காட்டி ஐஞ்செயல் தத்துவத்தை நன்கு விளக்குகிறார்.

## முடிவுரை

தமிழகத்தில் சிவ வழிபாடு காலங்காலமாக நடைபெற்று வந்துள்ளன.சிவபெருமானின் பலவகையான பெயர்களுள் 'ஆடல் வல்லான்' என்ற பெயர் மிகவும் பழமை மிக்கதாக இருந்துள்ளன.நடராஜர் திருமேனிகள் பல்வேறு அலங்கார அமைப்புகளுடன் மாறுபட்ட வடிவத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.அம்மாறுபட்ட எண்ணமே, தமிழர்கள் கலையின் மீது கொண்டுள்ள பற்றை பறைசாற்றுகிறது. இறைவன் ஆடிய ஏழுவகைத் தாண்டவங்களில் பேரின்பமயமான நிலையில் இறைவன் ஆடுவதே ஆனந்த தாண்டவம். இந்த ஆனந்த தாண்டவத்தின் மூலம் இறைவன் இவ்வுலக உயிர்களின் தத்துவத்தை காட்டுகிறான் என்பது திண்மையாகத் தெளிவுப் பெறுகின்றது.

## References


இளம்பூரணர் (1986) தொல்காப்பியம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், சென்னை-8

தட்சிணாமூர்த்தி, (2006) ஸ்ரீ நடராசத் தத்துவம், வானதி பதிப்பகம், சென்னை-17

திருமூலர், (1975) திருமந்திரம்-இராமநாதப் பிள்ளை உரை, கழக வெளியீடு, சென்னை-.

மனவாசகம் கடந்தார், (1961) உண்மை விளக்கம், தருமபுரம் ஆதீனம்.

வேங்கடசாமி.மயிலை. சீனி (1967) இறைவன் ஆடிய எழுவகை தாண்டவம், சாந்தி நூலகம்,-1



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License